பக்கங்கள் 26+ 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆவணி 17 செவ்வாய்க்கிழமை 02.09.2025 | அதிர்வு 33

## எரிந்த நிலையில் பெண்ணின் சடலம்



பதுளை, பல்லே கெட்டுவ பொலிஸ் தோட்டப் பகுதியில் எரிந்த நிலையில் பெண் ஒருவரின் 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# காணாமல்போனவர்களுக்கு என்ன நடந்தது?



### உண்மையைக் கண்டறிவதில் அரசு அக்கறை என்று புதுக்குடியிருப்பில் ஜனாதிபதி தெரிவிப்பு

(பா.சதீசன்)

“வடக்கு மக்களின் காணி உரிமைகள், மொழி மற்றும் கலாசார உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், காணாமல்போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறியும் உரிமையைப் பாதுகாப்பதற்கும் அரசு அர்ப்பணிப்புடன் உள்ளது.” 02



















## காணாமல்போன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

உலக தெங்கு தின நிகழ்வுகளுடன் இணைந்த வகையில், “நாடே சுபீட்சம் – ஆக்கும் விருட்சம் – கற்பகத்தரு வளம்” என்ற தொனிப்பொருளின் கீழ் இன்று முற்பகல் புதுக்குடியிருப்பு நகரில் நடைபெற்ற வடக்கு தெங்கு முக்கோண ஆரம்ப நிகழ்வில் பங்கேற்ற ஜனாதிபதி, அங்கு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“வடக்குக்கு மீண்டும் உயிரோட்டத்தை வழங்குவதன் மூலம் இந்த மக்களுக்கு வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் பொறுப்பை நிறைவேற்றுவேன்.

தேசிய ஒற்றுமையை உருவாக்குவதே எமது அரசின் நோக்கமாகும். அதற்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.” – என்றார்

## எரிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் அடையாளம் காண முடியாத அளவுக்கு எரிந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் யார் என அடையாளம் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

உயிரிழந்தவரின் சடலம் பதுளை வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வடக்கின் முதல் விதை தேங்காய் உற்பத்தி அலகு ஜனாதிபதியின் தலைமையில் பளையில் திறப்பு



வடக்கு தெங்கு முக்கோண திட்டத்தின் கீழ், வடக்கின் முதல் விதைத் தேங்காய் உற்பத்தி அலகு இன்று காலை பளை நகரில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்தத் திட்டம் இலங்கை தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையேயான கூட்டுத் திட்டமாக செயற்படுத்தப்படுகின்றது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய பகுதிகளை வடக்கு தெங்கு முக்கோணமாக அபிவிருத்தி செய்வதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. இதன் கீழ், 2025 ஆம் ஆண்டுக்குள் வடக்கு மாகாணத்தில் 16 ஆயிரம் ஏக்கர் தேங்காய் பயிரிட எதிர்பார்க்கப்படுகின்றது. 2025 முதல் 2027 வரையிலான 3 ஆண்டுகளில் இது 40 ஆயிரம் ஏக்கராக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி விதை தேங்காய் மரக்கன்றையும் நட்டு, உற்பத்தி அலகைத் திறந்து வைத்தார்.

பெருந்தோட்ட மற்றும் சமூக உள் கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர் கே.இளங்குமரன், வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், மற்றும் தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் அதிகாரிகளும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதேவேளை, புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கு முன்பாகவுள்ள பகுதியில் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையால் நடத்தப்படும் தெங்கு தொடர்பான கண்காட்சியையும் ஜனாதிபதி பார்வையிட்டார்.




















# தமிழ்க் கட்சிகளின் ஏற்பாட்டில் சர்வதேச நீதி கோரி மருதனார்மடத்தில் இன்று கையெழுத்துப் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ்க் கட்சிகளின் ஏற்பாட்டில் சர்வதேச நீதி கோரிய கையெழுத்துப் போராட்டம் இன்று காலை 10 மணியளவில் யாழ். மருதனார்மடத்தில் நடைபெற்றது.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா பிரகாஷ் தலைமையில் மருதனார்மடத்தில் அமைந்துள்ள வலிகாமம் தெற்கு பிரதேச சபை முன்றலில் இந்தக் கையெழுத்துப் போராட்டம் நடைபெற்றது.

இதில் பிரதேச சபை உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.












### யாழ். விஜயத்தின்போது

# புலனாய்வு அதிகாரிகளை அதிரவைத்த ஜனாதிபதி

ஜனாதிபதி அநுரகுமார திஸ ாநாயக்க யாழ்ப்பாணத்துக்கு நேற்று வந்திருந்த நிலையில், அவர் எப்போது யாழ்ப்பாணம் வருகின்றார்? யாழ்ப்பா ணத்தில் எங்கு தங்கியிருக்கின்றார்? என்ற விடயம் புலனாய்வு அதிகாரிகள் உட்பட அரச பெருந்தலைகள் எவருக்கும் தெரியாமல் இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார யாழ்ப் பாணத்துக்கு நேற்றுப் பயணம் மேற் கொண்டார். இந்தப் பயணத்தின்போது, முதலாவது நிகழ்வாக காலை 10 மணிக்கு மயிலிட்டி துறைமுக அபிவிருத் திப் பணிகளை ஆரம்பித்து வைப்பதாக இருந்தது. ஜனாதிபதியின் பயணத்தை முன்னிட்டுப் புலனாய்வா ளர்கள் உச்சக் கட்டக் கண்காணிப்பைச் செலுத்தியிருந் தனர். இதனால், 31ஆம் திகதி நள்ளி ரவே ஜனாதிபதி இராணுவக் காவலரண் களை தாண்டிவிட்டார் என்ற தகவல் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத் துள்ளது. எனினும், யாழ்ப்பா ணத்துக் குள் ஜனாதிபதி நுழைந்து விட்டாரா? அவர் எங்கு சென்றார்? என்று அவர்க ளால் தொடர்ச்சியாக அறியமுடியவில்லை.

இந்த விடயங்கள் தொடர்பில் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தெரியாத நிலையில் நேற்று அதிகாலை பாது காப்பு வட்டாரங்களிலும் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களி டத்திலும் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. பின்னர் மயிலிட்டித் துறைமுக அபிவி ருத்திப் பணிகளுக்காக எந்த வாகனத் தொடரணியும் இல்லாமல் தனி வாக னத்தில் ஜனாதிபதி சென்று இறங்கிய போதே, ஜனாதிபதி யாழ்ப்பாணத்தில் தான் தங்கியிருந்தார் என்ற விடயம் புலனாய்வு அதிகாரிகளுக்கும் அரச வட்டாரங்களுக்கும் தெரியவந்துள்ளது.

அநுரகுமார ஜனாதிபதியாகப் பதவியேற்பதற்கு முன்னர், யாழ்ப்பா ணத்துக்கு வரும்போதெல்லாம் தட்டா தெருச் சந்திக்கு அருகாக உள்ள வீடொன்றில் தங்கியிருப்பதே வழமை. இம்முறையும் அந்த வீட்டில் சென்றே தங்கியிருந்துள்ளார் என்று தெரிய வருகின்றது.

ஜனாதிபதிக்கும் அரச புலனாய்வு அதிகாரிகளுக்கும் இடையில் ஒரு இடைவெளி காணப்படுகின்றதாக அண் மைக்காலமாக அரசல் புரசலாகச் செய்திகள் வெளிவந்திருந்தன. ஜனாதி பதிக்கு மிக நெருக்கமான பாதுகாப்புப் படையணியே அவரின் பாதுகாப்பு விடயங்களை முற்றாகக் கையாண்டு வருவதாகவும் கூறப்படுகின்றது.

இந்தத் தகவல்களை உண்மையாக் கும் வகையிலேயே இந்தச் சம்பவமும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போம்புரு எல்ல நீர் வீழ்ச்சியில் நீராடிய ஆசிரியர் சடலமாக மீட்பு!

(பொகவந்தலாவ எஸ். சதீஸ் )

வெளிமட போம்புருஎல்ல நீர் வீழ்ச்சியில் நீராட சென்ற ஆசிரியர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று ஊவா பரணகம அம்பகஸ்துவ பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று (01) திங்கட்கிழமை இந்த ஆசிரியர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்த னர்.

கடந்த சனிக்கிழமை எட்டுபேர் கொண்ட ஆசிரியர் குழுவொன்று குறித்த பகுதிக்கு சுற்றுலா சென்றுள்ளது. இதில் ஒருவர் நீராடி கொண்டிருந்த நிலையில் நீரில் அடித்து செல்லப் பட்டுள்ளார். நீரில் அடித்து செல்லப்பட்ட ஆசிரியரை மற்றுமொரு ஆசிரியர்





காப்பாற்ற முயற்சி செய்த போது அவர் காயங்களுக்கு ஆளாகியுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

காணாமல் போனவரைத் தேடும் பணியில் சுழியோடிகள் ஈடுபட்டனர். இந்த நிலையில் அவர் சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்ட ஆசிரியர் 31 வயதுடைய உடப்புஸ்ஸலாவ பகுதியை சேர்ந்த ஒரு குழந்தையின் தந்தை எனவும் இவர் உடப்புஸ்ஸலாவ டலோஸ் தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆசிரிய ராக பணிபுரிந்து வருகிறார் என்றும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணை களில் இருந்து தெரிவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஊவா பரணகம அம்பகஸ்துவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# முன்னாள் எம்.பி. தர்மலிங்கத்தின் 40ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு

(எஸ்.நிதர்ஷன்)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விஸ்வநாதர் தர்மலிங்கத்தின் 40ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு இன்று அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், தாவடியில் உள்ள அவரது நினைவுத் தூபியில் இன்று காலை 7 மணியளவில் ஓய்வுபெற்ற தபால் அதிபர் முருகேசு சண்முகம் தலைமையில் இந்த நினைவஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது நினைவுத் தூபிக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா.தனபாலன் “தமிழுணர்வும் ஈழத்தமிழர் கல்வி உரிமையும்” எனும் தலைப்பில் உரையாற்றினார்.

இந்த நினைவஞ்சலி நிகழ்வில் வி.தர்மலிங்கத்தின் மகனும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்

தொடர்ச்சி▼












# முன்னாள் எம்.பி. தர்மலிங்கத்தின் 40ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு

தொடர்ச்சி▲

தன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.விகே.சிவஞானம், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

23 வருடங்கள் மானிப்பாய் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த விஸ்வநாதர் தர்மலிங்கம் 1985 ஆம் ஆண்டு செப்டெம்பர் 2 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவராகவும் 23 ஆண்டுகள் தொடர்ச்சியாக உடுவில், மானிப்பாய் தொகுதிகளின் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்த விஸ்வநாதர் தர்மலிங்கம், 1985ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 2 ஆம் திகதி மானிப்பாயில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.













# சந்நிதியான் ஆச்சிரமத்தின் முதல்வருக்கு சுழிபுரம் அம்பாள் அறநெறியால் கௌரவம்

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் மோகனதாஸ் சுவாமிகள் அவரது 76 ஆவது அகவை தின நிகழ்வில் சுழிபுரம் அம்பாள் அறநெறிப் பாடசாலை சமூகத்தினரால் "திருபெருந்தகை" என்ற உயரிய பட்டம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இரவு 7 மணிக்கு இந்த நிகழ்வு இடம்பெற்றது.






# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## சாகாத கருத்தியல்

'விடுதலைப் புலிகள் அமைப்பு கட்டமைப்பு ரீதியாக தோற்கடிக்கப் பட்டாலும் அதன் பிரிவினைவாத கருத்தியல் இன்னும் முடியவில்லை.' - இப்படிக் கூறியிருக்கின்றார் சிறிலங்கா பொது ஜன பெரமுனவின் (மொட்டுக் கட்சியின்) தேசிய அமைப் பாளர் நாமல் ராஜபக்ஷ.

புலிகள் அமைப்பு கட்டமைப்பு ரீதியாக தோற்கடிக்கப்பட்டது என்பது சந்தேகத்திற்கு இடமில்லாத விடயம் தான். அதேபோல அதன் கருத்தியல் நிலைப்பாடு தோற்கடிக்கப்பட்டதா என்ற கேள்வியும் நியாயமானதே.

புலிகள் அமைப்பு கட்டமைப்பு ரீதியாக தோற்கடிக்கப்பட்டது எங்ஙனம் என்பதே இப்போது கேள்விக் குரிய விடயம். அது முறையற்ற விதத்தில் நடந்தபடியால்தான் புலிகளின் கருத்தியல் இன்னமும் உயிர்ப் போடு இருக்கின்றது.

அந்தக் கருத்தியல் வளர்வதற்கான - தமிழ் மக்கள் மத்தியில் அது ஊன்றி நிலை பெறுவதற்கான - காரணங்கள் இன்னமும் அப்படியே இருக்கின்றன.

தனது காட்டுமிராண்டித்தனத்தால் - அரச பயங்கரவாத கொடூரத்தினால் - மோசமான வன்முறையால் - புலிகள் அமைப்பை பௌத்த - சிங்கள பேரினவாத அரசுகள் தோற்கடித்திருக்க லாம். ஆனால் அந்தப் புலிகள் அமைப்பு உருவாக - தமிழ் மக்கள் மத்தியில் ஊடுருவ - தமிழ் மக்கள் மத்தியில் நின்று, நிலைத்து, நீடிக்க - காரணமான கருத்தியல் இன்னமும் நிலைத்திருக்கின்றது. அந்தக் கருத் தியல் உருவாவதற்கான காரணத்தை - அந்த அமைப்பை முறையற்ற விதத்தில் அடக்க முற்பட்ட சிங்கள பேரினவாதம் இன்னமுமே உணர்ந்து கொள்ளவில்லை. அல்லது உணர்ந்து கொண்டு அதை நிவர்த்திக்கத் தயார் இல்லை. அதனால் அந்த கருத்தியல் தொடர்ந்தும் நீடிக்கவே செய்யும்.

தமிழ் மக்களின் ஆன்மாவில் ஊடுருவி நிற்கும் அந்தக் கருத்தியலை - அப்படி அது ஊடுருவி நிற்பதற்கான ஏது நிலைகளை - உருவாக்கிய பௌத்த, சிங்களப் பேரினவாதம் அதை உணர்ந்து கொள்ள விரும்ப வில்லை. அல்லது புரிந்துகொள்ள முற்படவில்லை. அந்த நிலைமை நீடிக்கும் வரை அந்தக் கருத்தியலும் தமிழ் மக்கள் மத்தியில் நீடிக்கவே செய்யும்.

புலிகள் அமைப்பை முறையற்ற விதத்தில் அரச பயங்கரவாதத்தினால் அடக்கியமை போல தமிழ் மக்கள் மனதில் ஊடுருவி நிற்கும் அந்தக் கருத்தியலை அழித்து விட முடியாது. இதனை நாமல் ராஜபக்ஷ போன்ற பௌத்த - சிங்களத் தீவிரப்போக்கு டைய தலைவர்கள் புரிந்து கொள்ள வில்லை. புரிந்து கொள்ள மாட்டார் கள். ஏனெனில் அவர்கள் பௌத்த - சிங்கள பேரினவாத கருத்தியல் என்ற வெறித்தனத்தில் மூழ்கியவர்கள்.

''முன்னாள் கடற்படைத் தளபதி ஒருவர் சிறை வைக்கப்பட்டுள்ளார். அடையாள அணிவகுப்பில் புலி உறுப்பினர் ஒருவரே சாட்சியம் அளித்துள்ளார். இப்படியான நிலை வரும் என அந்தக் கடற்படைத் தளபதி நினைத்திருக்கவே மாட்டார்'' - என் றும் நாமல் ராஜபக்ஷ கூறுகிறார்.

உண்மைதான். புலிகளைப் பயங்கர வாதிகளாகச் சித்திரித்து, அவர்களை அழிப்பதற்கு மிக மோசமான அரச பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்டவர்கள் ராஜபக்ஷக்கள். அதை வழி நடத்தியவர்களும் அவர்கள்தான். அதைத் தூண்டி மிகக் கொடூரத்தை தமிழினத்தின் மீது இழைத்தவர்களும் அவர்கள்தான். அச்சமயத்தில் இத்த கைய கொடூரங்கள் ஒரு காலத்தில் உலகின் முன் வரும் என்று அவர்கள் நம்பவில்லை. அதைத்தான் ''அப் போது அந்தத் தளபதி அப்படி நினைத்திருக்க மாட்டார்'' என்று நாமல் ராஜபக்ஷ இப்போது கூறு கிறார்.

தமிழினத்தின் மீது மிக மோசமான கொடூரத்தைக் கட்டவிழ்த்து விட்ட ராஜபக்ஷக்கள் அப்போது செய்த அட்டூழியங்கள், இப்போது அம்பல மாகும் என்பதை நினைத்துக் கூடப் பார்த்திருக்க மாட்டார்கள்தான்.



# கச்சதீவுக்கு ஜனாதிபதி கண்காணிப்பு விஜயம்

யாழ்ப்பாணத்தில் பல அபிவிருத்தித் திட்டங்களைத் ஆரம்பித்து வைக்கும் நிகழ்வுகள் மற்றும் திறப்பு விழாக்கள் என்பவற்றில் நேற்று பங்கேற்ற ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, யாழ்ப்பாணத்தில் உள்ள கச்சதீவுக்கு கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டார்.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் , பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால, வடக்கு கடற் படைக் கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் புத்திக லியனகமகே ஆகியோரும் இந்த விஜயத்தில் இணைந்து கொண்டனர்.






















# தமிழ் தூது தனிநாயகம் அடிகளாரின் 45 ஆவது ஆண்டு நினைவு தினம்!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

தமிழ் தூது தனிநாயகம் அடிகளாரின் 45 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று திங்கட்கிழமை (01) மன்னாரில் நினைவு கூறப்பட்டது.

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் நகர பகுதியில் அமைந்துள்ள அன்னாரது உருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்வில் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை ஜெயபாலன் குரூஸ் அடிகளார், தமிழ் சங்கத்தின் பிரதிநிதிகள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.



# பாடசாலை சேவைகளில் ஈடுபடும் தனியார் பஸ்கள் பரிசோதனைக்கு!

(பொகவந்தலாவ எஸ். சதீஸ் )

ஹட்டன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பாடசாலை சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் நேற்று திங்கட்கிழமை நுவரெலியா மாவட்ட வாகன பரிசோதகர்களினால் பரிசோத னைக்கு உட்படுத்தப்பட்டது.

இதன்போது இது தொடர்பாக ஹட்டன் பொலிஸ் தலைமையக பொலிஸ் நிலையத்தில் பாடசாலை பஸ் சேவையாளர்களுக்கான தெழிவூட்டல் நிகழ்வு ஒன்றும் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் ஹட்டன் பொலிஸ் வலையத்துக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் பிரசாத் வீரசேகர, உதவி பொலிஸ் அத்தியட்சகர் நிஷங்க கொடமுல்ல, ஹட்டன் தலைமை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி டபிள்யூ.ஏ.ஆர்.டி. சுகததாச, நுவரெலியா மாவட்ட பஸ் பரிசோதகர் சாலியபண்டார, உதவி பரீசோதகர் இந்திக்க களுவாரச்சி, ஹட்டன் பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி வசந்த அமர சிறீ ஆகியோர் கலந்து கொண்டனர்.





பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பாடசாலை சேவையில் ஈடுபடும் பேருந்துகளில் காணப்படும் குறைபாடுகளை ஒரு வார காலத்துக்குள் சீர் செய்து மீள காண்பிக்குமாறு பாடசாலை சேவை சாரதிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.




# பல்கலைக்கழக மாணவர்களுக்கான இரத்தினம் அறக்கட்டளையின் உதவி!

அமரர்களான திரு திருமதி ரகுநாதன் ஆகியோர் நினைவாக, அவர்களது நிதிப் பங்களிப்பில், இரத்தினம் அறக்கட்டளையின் அனுசரணையுடன், விசன்ஸ் குளோபல் எம்பவர்மென்ற் நிறுவனத்தின் ஊடாக 20 மாணவர்களுக்கான கல்வியுதவி வழங்கும் நிகழ்வு வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம் மற்றும் வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் அருளம்பலம் அற்புதராஜா ஆகியோர் முன்னிலையில், வவுனியாவில் மாகாண தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப கேந்திர மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

இரண்டு நாள்கள் தலைமைத்துவப் பயிற்சி நடத்தப்பட்டு, இரண்டாம் நாள் மாணவர்களுக்கான புலமைப்பரிசில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

விசன்ஸ் குளோபல் எம்பவர்மென்ற் நிறுவன தலைவர் நடராஜா தெய்வேந்திரராஜா தலைமையேற்று நடத்திய இந்த நிகழ்வில் இரத்தினம் அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி இரத்தினம் நித்தியானந்தனும், விசன்ஸ் அமெரிக்கா நிறுவன நலன்விரும்பி ஹரிச்சந்திரனும் மற்றும் விசன்ஸ் இலங்கை நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் அன்ரனி ஜீவரத்தினம் மயூரனும் கலந்து கொண்டு, புலமைப் பரிசில் திட்டத்தின் நோக்கத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.

மாணவர்களுக்கான சான்றிதழ்கள் ஆளுநர் மற்றும் வவுனியா பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் ஆகியோரால் வழங்கப்பட்டன.

போரால் நேரடிப் பாதிப்படைந்த குடும்பங்கள், பெண் தலைமைத்துவம் கொண்ட குடும்பங்கள், ஒற்றைப் பெற்றோர் குடும்பங்கள் மற்றும் மலையக தோட்ட சமூகம் உள்ளடக்கிய பல்வகை பின்தங்கிய சமூக பொருளாதார நிலைகளில் வாழும் குடும்பங்களில் இருந்து பல்கலைக் கழக கல்வியைப் பயிலும் மாணவர்களுக்கான மாதாந்தக் கல்வி உதவித் தொகையானது இத்திட்டத்தின் மூலமாக வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்றிட்டத்துக்கு இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்து 150 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் விண்ணப்பித்திருந்த நிலையில் அவர்களது ஆவணங்கள், கல்விச் சான்றிதழ்கள் மற்றும் நற்சான்றிதழ்கள் அடிப்படையில் நேர்காணல் மற்றும் கள விஜயங்கள் மூலம் உறுதி செய்யப்பட்டு 20மாணவர்கள்தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சான்றிதழ் வழங்கும் போது உரை நிகழ்த்திய ஆளுநர் வேதநாயகம் ,

பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்வோரில் பெரும்பான்மையானோர் புத்தகப் பூச்சிகளாகவே இருக்கின்றனர். ஆனால் இன்று உங்களுக்குக் கற்கும் காலம் முழுவதுக்கும் புலமைப்பரிசில் நிதியை வழங்குகின்றார்கள். அத்துடன் வெறுமனே நிதியை வழங்கிவிட்டுச் செல்லாமல், உங்களுக்கு தலைமைத்துவப் பயிற்சியையும் தந்திருக்கின்றார்கள். நிச்சயம் அது உங்களில் மாற்றத்தை ஏற்படுத்தும்.

ஒவ்வொருவரும் திறன்களை வளர்த்துக்கொள்ள வேண்டும். அத்தோடு நீங்கள் ஒவ்வொருவரும் நேரிய சிந்தனையையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். எதையும் எங்களால் செய்ய முடியும். முயன்றால் முடியாதது என்று எதுவுமில்லை. இதை நீங்கள் ஒவ்வொருவரும் மனதிலிருத்தவேண்டும்.– என்றார்.












# சாரண ஆசிரியருக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு

(றிபாஸ்)

அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்தின் அனுசரணையுடன் சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலகத்தால் நடத்தப்பட்ட சாரணர் ஆசிரியர்களுக்கான கலைகூறு ஒன்று பயிற்சியை நிறைவு செய்த ஆசிரியர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு சம்மாந்துறை அல் மர்ஜான் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் எச். நைறூஸ்கான் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வலயக் கல்வி பணிப்பாளர் எஸ்.மகேந்திரகுமார் பிரதம அதிதியாகவும், முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளரும், சாரண சங்கத்தின் ஆலோசருமான யூ. எல்.எம்.ஹாசிம் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.



# மன்னாரில் இருந்து இரண்டு வீரர்கள் கால்பந்தாட்ட தேசிய அணிக்குத் தெரிவு



(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

இலங்கை 16 வயது கீழ் உதைபந்தாட்ட தேசிய அணியில் மாணவர்களை உள்வாங்குவதற்கு நடைபெற்ற தேர்வில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையைச் சேர்ந்த இரு மாணவர்கள் தெரிவாகி மாவட்டத்துக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களான என்.கெஸ்ரோன், கே.ஜெனிஸ்ரன் ஆகியார் இந்தத் தெரிவில் கலந்து கொண்டு சிறப்பாக விளையாடித் திறமையை வெளிப்படுத்தியதன் அடிப்படையில் தேசிய அணியில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இரு மாணவர்களும் கலந்து கொள்ளும் முதலாவது சர்வதேச உதைபந்தாட்ட போட்டியானது சீனாவில் எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டி “U16 Tainyu Liufang Cup - 2025” இற்கான போட்டியாகும். இதற்கான மேலதிக பயிற்சிகள் எதிர்வரும் 4 ஆம் திகதி முதல் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இந்த மாணவர்கள் மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் இருந்து தமது கல்வியை மேற்கொள்கின்றார்கள். இந்த அடிப்படையில் மாணவர்களுக்கு உதவி செய்ய விரும்புவோர் அதிபர் ஊடாக வழங்கி மாணவர்களின் திறமைக்கான அங்கீகாரம் பெறுவதற்கு உதவுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாணவர்களது மேலதிக பயிற்சிக்கான செலவையும், அவர்கள் சீனாவில் இருக்கும் போது ஏற்படவுள்ள மேலதிக செலவையும் தாங்கிக் கொள்வதற்கான பண வசதி இல்லாத சூழ்நிலையில் தற்போது உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.





# காரைதீவு - மண்டூர் மாபெரும் பாதயாத்திரை; 5,000 அடியார்கள் பக்தி பூர்வமாக பங்கேற்பு!

(வி.ரி. சகாதேவராஜா)

இந்துமத எழுச்சியாக காரைதீவு – மண்டூர் மாபெரும் பாதயாத்திரை கடந்த (30) சனிக்கிழமை உணர்வு பூர்வமாக இடம்பெற்றது. சுமார் 5000 அடியார்கள் பக்தி பூர்வமாக இதில் பங்கேற்றனர்.

ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 07 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளது.

வரலாற்று பிரசித்தி பெற்ற “ சின்னக் கதிர்காமம்” என அழைக்கப்படும் மண்டூர் முருகன் ஆலயத்துக்கான வருடாந்த தலபாதயாத்திரை காரை தீவிலிருந்து ஆரம்பமாகியது.

ஆயிரக்கணக்கான பக்தர்களுடன் பாதயாத்திரை அலங்கரிக்கப்பட்ட முருகப் பெருமானின் படங்களுடன் நந்திக் கொடி சகிதம் ஏழு உழவு இயந்திரங்கள் நகர அடியார்கள் பேரணியும் நகர்ந்தது. அரோகரா கோஷம் விண்ணைப் பிளக்க யாத்திரை உணர்வு பூர்வமாக இடம்பெற்றது. பஜனைகள் குழுவினரின் பஜனை பக்திப் பாடல்களும் வழிநெடுகிலும் இடம்பெற்றன

சுமார் ஐந்து கிலோமீட்டர் தூரத்திற்கு அடியார்கள் அணி நீண்டிருந்தது. காவடியாட்டமும் இடையே இடம்பெற்றது.

காரைதீவு இந்து சமய விருத்திச் சங்கம் இந்த பாரிய பாதயாத்திரையை வருடாந்தம் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# உள்ளூர் உற்பத்திகளை அதிகரிப்பதற்கு உள்ளூராட்சி மன்றங்களின் நடவடிக்கை தேவை

## கல்வி அபிவிருத்திக் குழுமக் காப்பாளர் சச்சிதானந்தன் தெரிவிப்பு

(த.சுபேசன்)

வடக்கு மாகாணத்தில் உள்ளூர் உற்பத்திகளை அதிகரிப்பதற்கு உள்ளூராட்சி மன்றங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கை கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் காப்பாளர் நடராசா சச்சிதானந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் லட்சக்கணக்கான பனை மரங்கள் உள்ளன. அதன் ஒவ்வொரு பாகமும் ஏதோவொரு உற்பத்திக்கு உகந்தது. ஆனால் அவை பயன்பாடு இன்றி வீணாகிப் போகின்றன.

பனை வளத்தை முழுமையாக பயன்படுத்தி அதிலிருந்து வருமானத்தைப் பெறுவதற்கான நடவடிக்கையைப் பனை அபிவிருத்திச் சபை மற்றும் வடக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்கள் முன்னெடுக்க வேண்டும்.

பல நாடுகள் தென்னை மற்றும் பனை வளத்தைப் பயன்படுத்தி தும்பு உற்பத்தி உள்ளிட்ட பல உற்பத்திகளைச் செய்கின்றன. எம்மிடம் அந்த வளங்கள் இருந்தும் நாம் பிளாஸ்டிக்காலான இடியப்பத் தட்டு, தும்புத்தடி, விளக்குமாறு



களைப் பாவிக்கின்றோம். இதன் பாதிப்புக்களை உணராதவர்களாக நாம் இருப்பது வருத்தமளிக்கின்றது.

முன்னைய காலத்தில் இவ்வாறான பனை சார் மற்றும் தென்னை சார் உற்பத்திப் பொருள்கள் ஊடாகவே வடக்கு மாகாண மக்கள் வருமானம் ஈட்டினர். ஆனால் இன்று அவை அனைத்தையுமே எம் மக்கள் கைவிட்டு விட்டனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து விவசாய உற்பத்திகளை வளர்முக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நிலைமை ஏற்பட வேண்டும். யாழ் விமான நிலையத்தைத் மெருகூட்டும் பட்சத்தில் அது சாத்தியமாகும். அதே நேரம் விவசாயிகளும் அதிகளவில் உற்பத்திகளில் ஈடுபட்டு வருமானத்தை ஈட்ட முயற்சிக்க வேண்டும்.

இந்தியாவில் வாழை நாரில் சேலை தயாரிக்கின்றனர். ஆனால் எமது நாட்டில் அவ்வாறான மூலப் பொருள்கள் வீணாக்கப்படுகின்றது. எம்மால் அந்த உற்பத்தியை செய்ய முடியாவிட்டாலும் மூலப் பொருளை ஏற்றுமதி செய்வதற்காவது முயற்சி எடுக்க வேண்டும்.

அதேநேரம், இலங்கையில் பொலித்தீன் பாவனை வெகுவாக அதிகரித்துக் காணப்படுகின்றது. அதன் விளைவுகள் மோசமாக இருக்கும். முடிந்தவரை பொலித்தீன் பாவனையைக் குறைத்துப் பாதிப்பு இல்லாத உள்ளூர் உற்பத்திகளைப் பயன்படுத்த வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் மக்களின் வாழ்வியலோடு தொடர்பு பட்ட பிரச்சினைகள் காணப்படுகின்றன.

அவை தொடர்பில் பல்கலைக்கழக மாணவர்கள் ஆய்வுகளை நடத்த வேண்டும். ஆய்வுகளுக்கான நிதியினை புலம்பெயர் மக்கள் ஊடாக பெற முயற்சிக்கலாம்.

அரசியல்வாதிகளால் முன்வைக்கப்படுகின்ற தீர்வை அனைவரும் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும்–பல்கலைக்கழகங்கள் ஊடான ஆய்வு முடிவுகளையும்–அதற்கான தீர்வுகளையும் எவரும் எதிர்க்க மாட்டார்கள் .– என்றார்.




# கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு பிளாஸ்டிக் கழிவு சேமிக்கும் தொட்டி

(த.சுபேசன்)

சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகம் ஊடாக, கொக்குவில் இந்துக் கல்லூரிக்குப் பிளாஸ்டிக் கழிவுகளைப் பாதுகாப்பாகச் சேமிக்கும் கழிவுத் தொட்டி ஒன்று வழங்கி வைக்கப் பட்டுள்ளது.

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் தவிசாளருடைய பங்களிப்பில் சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகம் ஊடாக இந்த உதவித் திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

உதவித் திட்டம் வழங்கும் நிகழ்வில் பாடசாலை அதிபர், சுன்னாகம் பாரம் பரிய ரோட்டரிக் கழக உறுப்பினர்கள், பாடசாலையின் இடைவினைக் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.







# கற்பிட்டி மண்டலக்குடாவில் இரண்டு வீடுகளுக்கு அடிக்கல்

(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)

கற்பிட்டி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மண்டலகுடா கிராம அலுவலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட இரண்டு குடும்பங்களுக்கான வீடமைப்புத் திட்டதுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கற்பிட்டி பிரதேச செயலாளர் பீ.ஜீ.எஸ். என் பிரியதர்ஷினி தலைமையில் இடம்பெற்றது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்படும் இந்த வீடுகள், குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது எனவும் தெரிவு செய்யப்பட்ட இரண்டு குடும்பங்களுக்கு புதிய வீடுகள் வழங்கப்படுவதன் மூலம், அவர்களின் வீடமைப்பு கனவை நனவாக்க ஒரு வாய்ப்பு கிடைத்துள் ளது.

இந்தத் திட்டம் பொருளாதாரக் கஷ்டங்கள் காரணமாக வீடுகளைக் கட்ட முடியாத குடும்பங்களுக்கு நிரந்தரமான தீர்வைக் கொடுப்பதுடன், அவர்களின் எதிர்காலத்ததுக்கான சிறந்த முதலீடாகவும் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்த நிகழ்வில் புத்தளம் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.பைசல், கற்பிட்டி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எஸ்.எம் றிகாஸ், கற்பிட்டி பிரதேச சபையின் மண்டலகுடா உறுப்பினர் சுவிஸ் பைசல், அரச அலுவலக அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# முல்லைத்தீவு மாவட்டத்துக்கென விளையாட்டுக் கட்டடத் தொகுதி !

## தேவையை அபிவிருத்திக் குழுவில் ரவிகரன் எம்.பி. முன்வைப்பு

(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு மாவட்டத்துக்கென விளையாட்டுக் கட்டடத் தொகுதி ஒன்று தேவையென வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவில் தீர்மானம் ஒன்றை முன்மொழிந்துள்ளார்.

இந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனால் முன்வைக்கப் பட்ட குறித்த தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. குறித்த தீர்மானத்தை உரிய தரப்பினருக்கு நட வடிக்கைக்காக அனுப்பி வைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இடம் பெற்றநிலையிலேயே குறித்த விடயம் தொடர்பில் பேசப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கருத்துத் தெரிவிக் கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் விளையாட்டுக் கட்டடத் தொகுதி இல்லாத நிலைகாணப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பில் ஏற்கனவே நாடாளுமன்றில் நான் பேசியுள்ளேன். அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் விளையாட் டுக் கட்டடத் தொகுதி அமைக்கப்பட வேண்டும் எனப் பேசியிருக்கின் றேன்.

முல்லைத்தீவு மாவட்டம் என்பது பின்தங்கிய மாவட்டமாகக் காணப்படு கின்றது. இருப்பினும் இந்த மாவட்டத் திலும் இளைஞர்கள் இருக்கின்றார்கள் என்பதை அனைவரும் உணர்ந்து செயற்படவேண்டும். எனவே முல்லைத் தீவு மாவட்டத்தில் விளையாட்டுக் கட்டடத் தொகுதி அமைக்கப்பட வேண்டியது அவசியமாகும் .

இந்த விடயத்தில் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் மற்றும் ஆளுநர் ஆகியோரும் கரிசனையோடு செயற்படு கின்றனர்.

ஆகவே இந்த விளையாட்டுக் கட்டடத் தொகுதி முல்லைத்தீவு மாவட்டத்திலும் அமைக்கப்படவேண்டும் என்பதைத் தீர்மானமாக முன்மொழிகின்றேன். – என்றார்.

இந்த நிலையில் இந்தத் தீர்மானம் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் இத்தீர்மானம் நடவடிக்கைக் காக உரியதரப்பினருக்கு அனுப்பி வைப்பது எனவும் முடிவெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# சர்வதேச நீதி கோரிய கையெழுத்துப் போராட்டம் நேற்றுத் தென்மராட்சியில் முன்னெடுக்கப்பட்டது!

செம்மணி உட்பட இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள மனிதப் புதைகுழிகள் மற்றும் இனப் படுகொலைகளுக்கு சர்வதேச நீதி கோரிய கையெழுத்துப் போராட்டம் நேற்று தென்மராட்சியில் முன்னெடுக் கப்பட்டது.

தென்மராட்சியின் சாவகச்சேரி, கொடிகாமம் நகரங்களில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் ஏற்பாட்டில் கையெழுத்து போராட்டம் முன்னெடுக் கப்பட்டது.

இதன்போது சாவகச்சேரி நகரசபை தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் மற்றும் பிரதேச சபை தவிசாளர் குகன் ஆகியோர் கையெழுத்து போராட்டத்தை ஆரம்பித்து வைத்தனர். சாவகச்சேரி வணிகர் கழ கத்தினர், ஓட்டோ சங்கத்தினர், சந்தை வியாபாரி கள் சங்கத்தினர், பொது மக்கள் எனப் பலரும் கையெழுத்துப் போராட்டத்தில் பங்கெடுத்தனர்.









# வட்டுவாகல் பாலத்தின் நிர்மாணப் பணி; ஜனாதிபதி இன்று ஆரம்பித்து வைத்தார்!

(பா.சதீசன் )

வட்டுவாகல் பாலத்தின் நிர்மாணப் பணிகளை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இன்று (02) நண்பகல் ஆரம்பித்து வைத்தார்.

அநுரகுமார திஸாநாயக்க ஜனாதி பதியாக பதவியேற்று ஒருவருட காலம் பூர்த்தியாகும் நிலையில், முன்னெடுக் கப்படும் செயற்றிட்டங்களை ஆரம்பித்து வைக்க ஜனாதிபதி வடக்குக்கு விஜயம் செய்துள்ளார்.

மிகநீண்டகால கோரிக்கையாக இருந்த வட்டுவாகல் பால நிர்வாகப் பணிகளை ஆரம்பிப்பதற்கு வருகை தந்தி ருந்த ஜனாதிபதியை, முல்லைத் தீவு மாவட்ட அரச அதிபர் அ.உமா மகேஸ்வரன் வரவேற்றார்.

தொடர்ந்து பால நிர்மாணப் பணிக் கான பெயர்ப்பலகையை ஜனாதிபதி திறந்து வைத்து மக்கள் மத்தியில் உரை நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, கடற் றொழில் அமைச்சர் சந்திரசேகரம், பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான இளங்குமரன், திலகநாதன், ஜெகதீஸ் வரன், ரவிகரன், மதகுருமார்கள், திணைக் களங்களின் அதிகாரிகள் , தவிசாளர்கள், உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.














## காற்றாலை, கனிய மணல் தொடர்பாக

# மன்னாருக்கு வருகை தந்த நிபுணர் குழு மக்கள் தொடர்பில் கரிசனை காட்டவில்லை!

## பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன்

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

காற்றாலை மற்றும் கனிய மணல் தொடர்பாக ஜனாதிபதியால் நியமிக்கப் பட்ட நிபுணர் குழு நேற்று (01) திங்கட் கிழமை மன்னாருக்கு வருகை தந்து பொது அமைப்புக்களை சந்தித்து கலந்து ரையாடியது. எங்களுடைய குற்றச்சாட்டுக் கள் தொடர்பிலும் அவர்கள் கரிசனை கொண்டதாக இல்லை. அவர்கள் ஏற் கனவே உள்ள பிரச்சினைகளைத் தீர்த்து இங்கு காற்றாலைகளை எவ்வாறு அமைக்கலாம் என்பது குறித்து அவர்க ளுடைய கருத்துக்களும் வாதங்களும் அமைந்திருந்தன.

இவ்வாறு பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்தார்.

மன்னாரில் இன்று செவ்வாய்க்கிழமை (02) மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக் கையிலேயே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காற்றாலை, கனிய மணல் விடயம் தொடர்பாக கடந்த 13 ஆம் திகதி ஜனாதி பதியைச் சந்தித்து உரையாடியதன் நிமித்தம் ஒரு மாத காலம் இடை நிறுத் தப்பட்ட வேலைத்திட்டம் தொடர்பாக நிபுணர்கள் குழு மன்னாருக்கு விஜயம் மேற்கொண்டு சிவில் அமைப்புக்கள் மற்றும் பொது மக்களை சந்தித்து அது சம்பந்தமான உரையாடல் ஊடாக தீர்மானத்துக்கு வரலாம் என ஜனாதி பதியால் தீர்மானிக்கப்பட்டது.

அதன் பிரகாரம் மின்சக்தி அமைச்சின் மேலதிக செயலாளர் தலைமையில் துறை சார் திணைக்களங்கள் குழுவாக நியமிக்கப்பட்டு,நேற்று மாவட்டச் செயலகத்தில் கலந்துரையாடல் மேற் கொள்ளப்பட்டது.

குறித்த கலந்துரையாடலுக்குப் பொது அமைப்புகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட் டிருந்தது.

இந்தக் கலந்துரையாடலில் ஏற்கனவே அமைக்கப்பட்ட 30 காற்றாலைகளின் பிரச்சினைகள் தொடர்பாகவும், இனி அமைக்கப்படவுள்ள காற்றாலைகளால் ஏற்படவுள்ள பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்கலாம் என்பது தொடர்பில் அவர்க ளுடைய வாதங்கள் அமைந்திருந்தன.

எங்களுடைய கோரிக்கையாக இருந்த மன்னார் தீவு பகுதியில் காற்றாலை, கனிய மணல் திட்டத்தை முற்றாக நிறுத்தப்பட வேண்டும் என்னும் விடயம் தொடர்பாக அவர்கள் அவதானம் செலுத் தியதாக இல்லை.

எங்களுடைய குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் அவர்கள் கரிசனை கொண்டதாக இல்லை. அவர்கள் ஏற் கனவே உள்ள பிரச்சினைகளைத் தீர்த்து இங்கு காற்றாலைகளை எவ்வாறு அமைக்கலாம் என்பது குறித்து அவர்க ளுடைய கருத்துக்களும், வாதங்களும் அமைந்திருந்தன.

எனினும் மக்களுடைய உணர்வுக ளைப் புரிந்து கொண்டு இடமாற்றத்தை ஏற்படுத்தி மக்களுடைய வாழ்வாதார – வாழ்வியல் இருப்புக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய இரு திட்டங்களையும் மன்னார் தீவில் இருந்து வெளியே எடுப்பது சம்பந்தமாக அவர்களுடைய பார்வை இருக்கவில்லை.

எனவே இவர்களால் பரிந்துரைக்கப் படும் அறிக்கை எவ்வாறு அமையப்போ கிறது என்பது குறித்து எங்களுக்கு சந்தேகம் இருக்கிறது. இவர்களின் அறிக்கையில் பிரகாரமே ஜனாதிபதி இறுதி முடிவுக்கு வருவார் என அவர்கள் கூறுகிறார்கள்.

ஜனாதிபதி காற்றாலை வேலைத்திட் டத்தை ஒரு மாதம் நிறுத்தியது கூட கண்துடைப்பு நாடகம் என நான் ஏற்கனவே ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக வைத்து ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளோம்.

அதேபோல் நிபுணர் குழுவும் எங்களுடைய பிரச்சினைகளை மாத் திரமே பேசுகின்றதே தவிர, எங்களுடைய கோரிக்கைகள், அடிப்படை உணர்வுகள் என்ன என்று அவர்கள் புரிந்து கொள் வதாக இல்லை.

அதில் உள்ள அதிகாரிகள் அத்தனை பேரும் ஏற்கனவே பல தடவைகள் மன் னாருக்கு வந்தவர்கள். பல கூட்டங்களில் அவர்களுடன் பங்கு பற்றியுள்ளோம். அவர்களுக்கு எங்களுடைய பிரச்சினை என்ன என்று தெளிவாகத் தெரியும்.

இந்த நிலையில் இந்த நிபுணர் குழுவில் புதியவர்களை இணைக்காது, அவர்களை மீண்டும் இந்தக் குழுவில் இணைத்திருக்கும் நிலையில் எமக்குச் சாதகமான பதில் கிடைக்கும் என்று நாங்கள் நினைக்கவில்லை.

மன்னார் மக்களின் கூட்டுக் கோரிக் கையாகிய காற்றாலை மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகிய இரு திட்டங்களும், மன்னார் தீவுப் பகுதியில் இருந்து வெளியே கொண்டு போகப்பட வேண்டும் என்ற கோரிக்கை எவ்வாறான நிலைப் பாட்டில் போகப்போகிறது என்பது குறித்து எமக்கு அச்சம் ஏற்பட்டுள்ளது.

அரசு தனது நிறைவேற்று அதிகாரத் தையும், பெரும்பான்மை ஆதரவையும் பயன்படுத்தி இந்தத் திட்டங்களை அமுல்படுத்துமோ என்கின்ற சந்தேகம் எழுந்துள்ளது.– என்றார்.

இதேவேளை மனித உரிமை செயற் பாட்டாளர் அருட்தந்தை எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார், வடமாகாண கடற் றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என். எம்.ஆலம் ஆகியோரும் கருத்துத் தெரிவித்தனர்.

# காற்றலைத் திட்டத்தை நிறுத்துவது தொடர்பில் நாங்கள் எந்த முடிவுகளையும் எடுக்க முடியாது!

## ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு செல்லப்படும் என்று நிபுணத்துவ குழுவினர் மன்னாரில் தெரிவிப்பு








(வாஸ் கூஞ்ஞ)

காற்றாலை அமைத்தல் தொடர்பான சகல வேலைத்திட்டங்களும் நிறைவடைந்துள்ள நிலையில் இதனை நிறுத்துவது தொடர்பில் தாங்கள் எவ்வித முடிவுகளையும் மேற்கொள்ள முடியாது. இருந்தும் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு செல்லப்படும் என்று நிபுணத்துவ குழுவினர் தெரிவித்துள்ளனர்.

மன்னாரில் இரண்டாம் கட்டக் காற்றாலைத் திட்டத்துக்கு எதிராக மன்னார் மக்கள் தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டுவரும் நிலையில், மன்னார் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

மன்னார்த் தீவில் 30 காற்றாலை மின் கோபுரங்கள் அமைக்கப்பட்டுச் செயற்பட்டு வரும் நிலையில், அதன் தொடர்ச்சியாக மேலும் 14 காற்றாலைகள் அமைப்பதற்கு உரிய வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் இரண்டாம் கட்ட காற்றாலைத் திட்டத்துக்கு எதிராக மக்கள் தொடர்ச்சியாகப் பாரிய எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர்.

வேறெந்த காலப்பகுதியிலும் நிகழாதவாறு கடந்த இரண்டு வருடங்களாக மன்னார் மாவட்டத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. மக்களின் வாழ்வியலை இந்தக் காற்றாலைத் திட்டமானது முற்றாக பாதிப்புக்கு உள்ளாக்கியுள்ளது என்று கூறி மன்னார் தீவுக்குள் காற்றாலை வேண்டாம் என்று வலியுறுத்தி மக்கள் சுழற்சி முறையிலான போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

மக்களின் இந்த போராட்டத்தைத் தொடர்ந்து காற்றாலை சம்பந்தமாக உள்ள பிரச்சினைகளை ஆராய்ந்து அறிக்கை ஒன்று சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதியால் அனுப்பி வைக்கப்பட்ட நிபுணத்துவ குழுவினருக்கும் மன்னார் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் இடையேயான கலந்துரையாடல் நேற்று திங்கட்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் மன்னார் தீவில் காற்றாலை மின் கோபுரங்கள் அமைப்பதால் பொது மக்களின் வாழ்வியல் எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்பது தொடர்பில் பொது மக்கள் பிரதிநிதிகள், இதில் கலந்து கொண்ட நிபுணத்துவ குழுவினரிடம் எடுத்துரைத்தனர்.

அத்தோடு மேலும் 100 நாள்களுக்கு இந்தத் திட்டத்தை நிறுத்தி வைத்து நேரடியாகக் காற்றாலை அமைக்கப்பட்டுள்ள பிரதேசங்களுக்குச் சென்று அங்கே உள்ள மக்களைச் சந்தித்து அவர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து இந்த காற்றாலைத் திட்டத்தை நிறுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு குறித்த நிபுணத்துவக் குழுவினரிடம் மக்களின் பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்தனர்.

அத்துடன் குறித்த காற்றாலை திட்டத்தை ஒருபோதும் மன்னார் தீவுக்குள் அனுமதிக்க போவதில்லை எனவும் மக்களின் விருப்பத்துக்கு மாறான இந்தத் திட்டமானது தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டால் மக்கள் போராட்டங்கள் தொடரும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இதற்கு பதில் அளித்த நிபுணத்துவ குழுவினர்,

காற்றாலை அமைத்தல் தொடர்பான சகல வேலைத் திட்டங்களும் நிறைவடைந்துள்ளன. இந்த இதனை நிறுத்துவது தொடர்பில் தாங்கள் எவ்வித முடிவுகளையும் மேற்கொள்ள முடியாது. இங்கு கலந்துரையாடப்பட்ட விடயம் தொடர்பில் ஜனாதிபதியிடம் தெரிவிக்க முடியும். இதற்கான முடிவை ஜனாதிபதியே மேற்கொள்வார் என்று தெரிவித்தனர்.

மன்னார் மாவட்டச் செயலாளர் க. கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில்,

மன்னார் பிரஜைகள் குழுவின் உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பிரதேச செயலாளர்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், மீனவ சமூகத்தின் பிரதிநிதிகள் மற்றும் அருட்பணியாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த காற்றாலை விடயம் தொடர்பில் கடந்த 13 ஆம் திகதி மன்னார் மாவட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் ஜனாதிபதிக்கு இடையிலான சந்திப்பு ஒன்று கொழும்பில் இடம்பெற்று இருந்தது. குறித்த சந்திப்பில் காற்றாலை தொடர்பான விடயங்களை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக குழு ஒன்றை நியமிப்பார் என்றும் அதுவரையில் ஒரு மாத காலத்துக்குக் குறித்த காற்றாலை வேலை திட்டங்களை நிறுத்தி வைப்பார் என்றும் ஜனாதிபதி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# காணாமல் ஆக்கப்பட்டோர் தினமும் இலங்கையும்!

**காணாமல் ஆக்குதல் என்றால் என்ன?**

ஒரு நபரை அரசு அல்லது ஆயுதக் குழுக்கள் கைது செய்வது அல்லது சட்டவிரோதமாகக் காவலில் எடுத்து வைப்பது. பின்னர் அவருடைய இருப்பிடத்தை மறைத்து குடும்பத்தாருக்கும் நீதித்துறைக்கும் தகவல் வழங்காமல் விடுவது. இது சட்டத்துக்குப் புறம்பான தடுத்துவைப்பு, கடத்தல், கொலை, உடல் மற்றும் மன வன்முறை போன்றவற்றோடு தொடர்புடையது. சர்வதேச சட்டப்படி இது மனிதாபிமான குற்றம் (Crime against humanity) எனக் கருதப்படுகிறது.

காணாமல் ஆக்குதல் (Enforced Disappearance) என்பது மிகக் கொடூரமான மனித உரிமை மீறலாக சர்வதேச சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. இதற்கெதிராக பல சர்வதேச சட்டங்கள், ஒப்பந்தங்கள், தீர்மானங்கள் உள்ளன.

**ஐக்கிய நாடுகள் சாசனம்** (UN Charter -1945)

அனைத்து உறுப்பினர் நாடுகளும் மனித உரிமைகளை மதிக்க வேண்டும் என்பதையே அடிப்படையாகக் கொண்டது. காணாமல் ஆக்குதல் என்பது உயிர் வாழும் உரிமை (Right to Life), சுதந்திரம் (Liberty), பாதுகாப்பு (Security) ஆகியவற்றை நேரடியாக மீறுகிறது.எனவே, UN சாசனத்தின் அடிப்படை நோக்கத்துக்கே எதிரானதாக கருதப்படுகிறது.

**மனித உரிமைகள் உலகப் பிரகடனம்**

(UDHR -1948)

அனைவருக்கும் வாழ்க்கை, சுதந்திரம், பாதுகாப்பு உரிமை உண்டு (அறிக்கை 3). எந்த ஒருவரும் சட்டவிரோதமாகக் கைது செய்யப்படக்கூடாது அல்லது தடுத்து வைக்கப்படக்கூடாது (அறிக்கை 9). காணாமல் ஆக்குதல், இவ்விரு உரிமைகளையும் முற்றிலும் மீறுகிறது.

**சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த சர்வதேச உடன்படிக்கை** (ICCPR ,1966)

அறிக்கை 6 – வாழ்க்கை உரிமையை பாதுகாக்கிறது.

அறிக்கை 7 – கொடுமை மற்றும் மனிதாபிமானமற்ற நடத்தையிலிருந்து பாதுகாக்கிறது.

அறிக்கை 9 – தனிப்பட்ட சுதந்திரம் மற்றும் சட்டப்படி கைது செய்யப்படும் உரிமை. எனவே, காணாமல் ஆக்குதல் ICCPR ஐ நேரடியாக மீறுகிறது.

கொடுமைக்கு எதிரான ஒப்பந்தம் (CAT,1984)

காணாமல் ஆக்குதல், குடும்பத்தினருக்கு மன மற்றும் உடல் வேதனை ஏற்படுத்துகிறது என்பதால் கொடுமை என்று வகைப்படுத்தப்படுகிறது. ஒப்பந்தம் உறுப்பினர் நாடுகளை கொடுமையை தடுக்க, விசாரிக்க, தண்டிக்க கட்டாயப்படுத்துகிறது.

**சர்வதேச மனிதாபிமான சட்டம்**

(International u;umanitarian Law - Geneva Conventions - 1949)

ஆயுத மோதல் காலங்களில் பொது மக்களைத் துன்புறுத்தக் கூடாது என்பதே அடிப்படை விதி.

ஆயுத மோதலில் கைது செய்யப்பட்டவர்களை, இரகசியமாகக் காணாமல் ஆக்குவது சட்டவிரோதம். போர் கைதிகள் மற்றும் பொது மக்கள் பற்றிய விவரங்களை குடும்பங்களுக்கு தெரிவிக்க வேண்டும் என்ற கடமை உள்ளது.

**மாநிலங்களால் காணாமல் ஆக்குதலுக்கு எதிரான பிரகடனம்** (UN Declaration, 1992)

ஐ.நா. பொதுச்சபை ஏற்ற, இந்தப் பிரகடனம், காணாமல் ஆக்குதல் மனித குலத்துக்கு எதிரான குற்றமாகும் என்று அறிவித்தது. இது சட்டபூர்வமான ஒப்பந்தம் அல்ல, ஆனால் சர்வதேச வழிகாட்டியாக கருதப்படுகிறது.

காணாமல் ஆக்குதலில் இருந்து அனைவரையும் பாதுகாக்கும் சர்வதேச ஒப்பந்தம் (ICPPED, 2006, 2010ல் அமலுக்கு வந்தது) இது காணாமல் ஆக்குதலுக்கு எதிரான மிக முக்கியமான சர்வதேச சட்டம்.

**சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்**

(ICC - Rome Statute, 1998)

காணாமல் ஆக்குதல் ஒரு தனிப்பட்ட குற்றமாகவும், மேலும் மனித குலத்துக்கு எதிரான குற்றமாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளது (Article 7). அதாவது, பரவலாகவும் திட்டமிட்டவாறும் நிகழ்த்தப்படும் காணாமல் ஆக்குதல்கள் சர்வதேச நீதிமன்றத்தில் விசாரிக்கப்படலாம்.

ஒவ்வொரு ஆண்டும் ஒகஸ்ட் 30 ஆம் திகதி உலகம் முழுவதும் “சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் (International Day of the Victims of Enforced Disappearances) அனுசரிக்கப்படுகிறது. 2010 ஆம் ஆண்டு ஐ.நா. பொதுச்சபையால் அறிவிக்கப்பட்ட இந்த நாள், காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் அவர்களின் குடும்பங்களின் உரிமைகளை நினைவூட்டுவதற்காக உலகளாவிய அளவில் கடைப்பிடிக்கப்படுகிறது.

தொடர்ச்சி▼

# காணாமல் ஆக்கப்பட்டோர் தினமும் இலங்கையும்!

### தொடர்ச்சி▲

காணாமல் ஆக்கப்படல் உலகளாவிய பிரச்சினையாக உலகம் முழுவதும் காணாமல் ஆக்கப்பட்டோரின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அம்னஸ்டி இன்டர்நேஷனல் (Amnesty International) மற்றும் ஹ்யூமன் ரைட்ஸ் வாச் (Human Rights Watch) வெளியிட்ட தகவல்களின்படி, 80 இற்கும் மேற்பட்ட நாடுகளில் இத்தகைய வழக்குகள் பதிவாகியுள்ளன. சில நாடுகளில், இது அரசியல் எதிர்ப்பை அடக்குவதற்கான கருவியாகப் பயன்படுத்தப்பட்டதாக குற்றச்சாட்டுகள் உள்ளன.

### இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர்

இலங்கை உலகில் அதிகளவில் காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினையை எதிர்கொண்ட நாடுகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. உள்நாட்டுப் போரின் போது (1983-2009) வடக்கு, கிழக்கு பகுதிகளில், குறிப்பாக 2008-2009 இடையிலான கடைசி போர்க்கட்டத்தில், ஆயிரக்கணக்கானோர் காணாமல் ஆக்கப்பட்டனர். ஜனாதிபதி விசாரணைக் குழுக்கள் மற்றும் மனித உரிமை ஆணையகம் வெளியிட்ட அறிக்கைகளின் படி, இலங்கையில் 60,000 முதல் 100,000 பேர்வரை காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

2018 ஆம் ஆண்டில் ஐ.நா. மனித உரிமை பேரவையின் மதிப்பீட்டின்படி, இலங்கையில் பதிவு செய்யப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் புகார் எண்ணிக்கை சுமார் 65,000 ஆகும். சிவில் சமூகம் மற்றும் மனித உரிமை அமைப்புகள் கூறுவதன்படி, வடக்கு - கிழக்கில் மட்டும் 20,000 இற்கும் மேற்பட்டோர் போரின் இறுதி கட்டத்தில் காணாமல் போனதாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர். மத்திய மற்றும் தெற்கில் (ஜே.வி.பி. கிளர்ச்சி 1987-1989 காலப்பகுதி) பல ஆயிரக்கணக்கான இளைஞர்கள் காணாமல் ஆக்கப்பட்டதாக ஆவணங்கள் காட்டுகின்றன.

### காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களின் போராட்டம்

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில், தாய்மார்கள் பல ஆண்டுகளாக வீதியோரங்களில் அமர்ந்து போராட்டங்கள் நடத்தி வருகின்றனர். 2017 முதல் 2025 வரை, இந்தத் தாய்மார்கள் 2,700 நாள்களுக்கு மேலாகத் தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களின் முக்கியக் கோரிக்கைகளாக காணாமல் போனவர்களின் நிலையை வெளிக்கொணர வேண்டும். பொறுப்புக்கூறலும் மனிதப் படுகொலைகளுக்கு முறையான நீதிப் பொறிமுறை - நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும்.

### அரச முயற்சிகள்

2016 மறைந்தவர்களைத் தேடும் அலுவலகம் (Office on Missing Persons - OMP) நிறுவப்பட்டது. ஆனால், அந்த அலுவலகம் எதிர்பார்த்த அளவுக்குச் செயற்படவில்லை எனவும், பாதிக்கப்பட்ட குடும்பங்களின் நம்பிக்கையைப் பெற முடியவில்லை எனவும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. 2023வரை, 14,988 புகார்களை OMP பெற்றிருந்தாலும், முழுமையான விசாரணைகள் மற்றும் தெளிவான பதில்கள் இன்னும் வழங்கப்படவில்லை.

### சர்வதேச அழுத்தம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமை கவுன்சில் (UNHRC) தொடர்ந்து இலங்கையை அழுத்தம் கொடுத்து வருகிறது. ஐரோப்பிய ஒன்றியம் (EU) மற்றும் பிற சர்வதேச அமைப்புகள், இலங்கையின் மனித உரிமை பொறுப்புக்கூறல் நிலைமையை அடிப்படையாகக் கொண்டு, உதவித் திட்டங்களை மறுபரிசீலனை செய்யும் நிலையில் உள்ளன.

இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை பல தசாப்தங்களாக நீடித்து வருகிறது. இதற்கு நீதி வழங்கப்படாமல் போனால், சமாதானமும் ஒற்றுமையும் நிலைத்திருக்காது. உண்மை மற்றும் சுயாதீன விசாரணை வேண்டும். அரசியல் அழுத்தம் இன்றி, சுயாதீனமாகவும் வெளிப்படையாகவும் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். காணாமல் போனவர்களின் பட்டியல், கைது செய்யப்பட்டவர்களின் பதிவுகள், சிறைச்சாலைகள் மற்றும் இராணுவக் கண்காணிப்பு மையங்களில் உள்ள தகவல்கள் பொது மக்களிடம் வெளிப்படையாகப் பகிரப்பட வேண்டும். உண்மையை மறைத்தல் அல்லாது, வெளிக்கொணர்வதே பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நம்பிக்கை தரும் முதல் படியாகும். சர்வதேச பங்குபற்றல் மற்றும் விசாரணைப் பொறிமுறை அவசியமாகின்றது. பல குடும்பங்கள் உள்ளூர் அமைப்புகளை நம்பவில்லை. எனவே, ஐ.நா. அல்லது சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் பங்கேற்பு தலையீடு விசாரணைகளில் அவசியம் இருக்க வேண்டும். இது விசாரணையின் நம்பகத்தன்மையை உயர்த்தும்.

நீதி மற்றும் பொறுப்புக்கூறல் அவசியம். காணாமல் ஆக்கப்பட்டதற்குப் பொறுப்பு உள்ளவர்கள் யார் என்பதை சட்ட ரீதியாக நிரூபித்து, அவர்களை நீதிமன்றத்தில் நிறுத்துவது அவசியம். எந்தப் பதவியிலும் இருந்தாலும், குற்றம் செய்தவர்களுக்கு சட்டத்தின் முன் சமமான தண்டனை வழங்கப்பட வேண்டும். தண்டனையின்றி விடுதலை (Impunity) என்ற நிலையை உடைத்தால்தான் எதிர்காலத்தில் இது மீண்டும் நிகழாது.

### குடும்பங்களுக்கு ஆதரவு மற்றும் இழப்பீடு

காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்குப் பொருளாதார இழப்பீடு வழங்கப்பட வேண்டும். குடும்பங்கள் வேலை வாய்ப்புகள், கல்வி உதவித் தொகை, மனநலம் சிகிச்சை போன்ற ஆதரவுகள் பெற வேண்டும். மனநலம் தொடர்பான உளவியல் ஆலோசனை மற்றும் சமூக அடையாளம் வழங்கப்படாவிட்டால், அவர்கள் தொடர்ந்து மன உளைச்சலுடன் வாழ வேண்டியிருக்கும்.

நினைவு பாதுகாப்பு (Memorialization)காணாமல் ஆக்கப்பட்டோரின் வரலாறு மறுக்க மற்றும் மறக்கப்படாமல், நாட்டின் வரலாற்றில் பதிவு செய்யப்பட வேண்டும். நினைவுச் சின்னங்கள், நினைவு தினங்கள், கல்வித் திட்டங்கள் மூலம் அடுத்த தலைமுறையினருக்கு இது பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.

சட்ட, அரசியல் மாற்றங்கள் எதிர்காலத்தில் காணாமல் ஆக்கப்படுதல் போன்ற சம்பவங்கள் மீண்டும் நடக்காமல் தடுக்கும் வகையில், வலுவான சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். பாதுகாப்புத் துறைகள், இராணுவம், பொலிஸ் ஆகியவை பொறுப்புக்கூற வேண்டிய கட்டாய விதிமுறைகள் கொண்டு வரப்பட வேண்டும்.

எனவே சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம், இலங்கைத் தமிழருக்கு புதிதல்ல. 16 ஆண்டுகள் கடந்தும் யுத்தத்தின் இறுதிக் கட்டத்திலும் அதன் பின்னரான காலங்களிலும் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் விடயத்தில் நீதி நிலைநாட்டப்படவில்லை. பொறுப்புக்கூறல் அற்ற ஆட்சி பீடங்கள் சிங்கள பேரினவாதம் எப்போது பதில் வழங்கும் ? வடக்குக் கிழக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் குடும்பங்கள் இன்னும் அன்புக்கு உரியவர்களின் சுவடுகளைத் தேடித் தவிக்கின்றன. நீதியின்றி சமாதானம் இல்லை என்பதே பாதிக்கப்பட்டோரின் அழுகுரல். உண்மையை வெளிக்கொண்டு, பொறுப்புக் கூறலை உறுதி செய்யும்வரை, இலங்கையின் காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை தீர்வு காணாது.



**நாகராசா தனுஸ்காந்,**
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

# அமெரிக்காவின் வரி விதிப்பை சமாளிக்க உதவித் திட்டத்தை அறிவிக்க வேண்டும்

## மத்திய அரசிடம் ஓ.பி.எஸ். வலியுறுத்தல்

அமெரிக்க வரிவிதிப்பு பாதிப்பை சமாளிக்க உதவி திட்டத்தை மத்திய அரசு அறிவிக்க வேண்டும் என்று முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கை,

இந்தியாவிலிருந்து அமெரிக்காவின் 50 சதவீத வரி விதிப்பால் 87 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்த இந்தியாவின் ஏற்றுமதி 50 பில்லியன் டொ லராக குறையக்கூடும் எனவும் இதன் காரணமாக இந்திய ஏற்றுமதித் துறை நிலைத் தன்மை மற்றும் வேலை வாய்ப்பு ஆகியவை அச்சுறுத்தலுக்கு ஆளாகும் என்றும் கூறப்படுகிறது.

எனவே, வரிவிதிப்பால் பாதிக்கப்பட்டுள்ள தொழில்களை பாதுகாக்க மானியம், வரி விலக்குச் சலுகைகள், ஊக்கத் தொகை, பிற நாடுகளுக்கான ஏற்றுமதியை விரிவுபடுத்துதல் ஆகியவை அடங்கிய ஓர் உதவித் திட்டத்தை உடனடியாக அறிவிக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.



# குடியேற்ற சட்டம் அமுலுக்கு வந்தது




இந்தியா முழுவதும் புதிய குடியேற்ற சட்டம் நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளது.

இதன்படி போலி கடவுச் சீட்டு, போலி விசா மூலம் இந்தியாவுக்குள் நுழைந்தால் 7 ஆண்டுகள் சிறை, 10 லட்சம் இந்திய ரூபா வரை அபராதம் விதிக்கப்படும். வெளிநாட்டினர் வருகையை முறைப்படுத்த கடவுச்சீட்டு சட்டம், வெளிநாட்டினர் பதிவு சட்டம், வெளிநாட்டினர் சட்டம், குடியேற்ற சட்டம் போன்றவை அமுலில் இருந்தன. அவை ஒன்றிணைக்கப்பட்டு புதிய குடியேற்ற மசோதா 2025 வரையறுக்கப்பட்டது.

இந்த மசோதா கடந்த ஏப்ரலில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. புதிய மசோதாவுக்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு கடந்த ஏப்ரலில் ஒப்புதல் வழங்கினார். இதைத் தொடர்ந்து புதிய குடியேற்ற சட்டம் 2025 இந்தியா முழுவதும் நேற்று அமுலுக்கு வந்தது.

# ஜெர்மனி நிறுவனங்கள் தமிழகத்தில் 3,201 கோடி இந்திய ரூபாவில் முதலீடு

## முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்




ஜேர்மனியில் மூன்று நிறுவனங்களுடன் 3,201 கோடி ரூபா முதலீடு மற்றும் 6,250 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கும் வகையிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில்,

அதிக முதலீடுகளை ஈர்க்கவும், வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் உத்தியோகபூர்வ பயணமாக ஜேர்மனி, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு முதல்வர் ஸ்டாலின் சென்றுள்ளார்.

அதன்படி, ஜேர்மனியில் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. நேற்று டசல்டார்ஃப் நகரில் நார் பிரெம்ஸ், நோர்டெக்ஸ் குழுமம், இ.பி.எம்- பேப்ஸ்ட் ஆகிய நிறுவனங்களுடன் 3,201 கோடி இந்திய ரூபா முதலீட்டில் சுமார் 6,250 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் மேற்கொளப்பட்டன.

ஜேர்மனியின், முனிச் நகரை தலைமையகமாக கொண்ட நார்-பிரெம்ஸ் நிறுவனம், காஞ்சிபுரம், சென்னையில் 2 ஆயிரம் கோடி இந்திய ரூபா முதலீட்டில் 3,500 பேருக்கு வேலை வழங்கும் வகையில், ரயில்வே கதவுகள் மற்றும் பிரேக்கிங் அமைப்புகளுக்கான அதிநவீன வசதியை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

ஹேம்பர்க் நகரை தலைமையகமாக கொண்ட நோர்டெக்ஸ் குழுமம், உலகின் மிகப்பெரிய காற்றாலை உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றாகும். இந்நிறுவனம் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அதன் தற்போதைய ஆலையை விரிவுபடுத்தும் வகையில் 1,000 கோடி இந்திய ரூபா முதலீட்டில் 2,500 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது.

மல்ஃபிங்கன் நகரை தலைமையகமாக கொண்டுள்ள இ.பி.எம்.-பேப்ஸ்ட் நிறுவனம், மின்சார மோட்டார்கள், மின்விசிறிகள் தயாரிப்பில் முன்னணி நிறுவனமாகும்.

இந்த நிறுவனம் சென்னையில் அதன் உலகளாவிய திறன் மையத்தை விரிவுபடுத்தவும் தமிழகத்தில் அதன் உற்பத்தியை அடுத்த 5 ஆண்டுகளில் 201 கோடி இந்திய ரூபா முதலீட்டில் விரிவுபடுத்தவும் 250 பேருக்கு வேலை அளிக்கும் வகையிலும் ஒப்பந்தம் மேற்கொண்டது.

முனிச் நகரை தலைமையகமாக கொண்டுள்ள பி.எம்.டபிள்யூ குழும நிறுவனம், செங்கல்பட்டு மாவட்டத்தில் வாகனங்களுக்கான ஆட்டோமோடிவ் அசல் உபகரணங்கள் உற்பத்தி ஆலையை நிறுவியுள்ளது. தமிழகத்தில் ஆட்டோமோடிவ் துறையில், குறிப்பாக மின்சார வாகனப் பிரிவில் அந்த நிறுவனத்தின் எதிர்கால விரிவாக்கத்துக்கான வாய்ப்புகள் குறித்து முதல்வர் ஸ்டாலின், அந்த நிறுவனத்தின் அரசு விவகாரங்களுக்கான உலகளாவிய தலைமை அலுவலர் தோமஸ் பெக்கர், பி.எம்.டபிள்யூ இந்திய நிறுவனத்துக்கான அரசு மற்றும் வெளியுறவு இயக்குநர் வினோத் பாண்டே ஆகியோரை சந்தித்துப் பேசினார்.

இந்த நிகழ்வில், தொழில்துறை அமைச்சர் டிஆர்பி.ராஜா, துறை செயலர் அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவன மேலாண்மை இயக்குநர் தாரேஸ் அகமது உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

ஜேர்மனி பயணத்தை முடித்துக் கொண்டு முதல்வர் ஸ்டாலின் நேற்று இங்கிலாந்து புறப்பட்டுச் சென்றார். அங்கு அயலக தமிழ் அமைப்பு நிர்வாகிகளை முதல்வர் சந்திக்கிறார். முதலீட்டாளர்களை சந்தித்து தமிழகத்தில் முதலீடு செய்யுமாறு அழைப்பு விடுக்கிறார்.

ஜேர்மனியின் கொலோன் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற 'மாபெரும் தமிழ்க்கனவு - ஜெர்மனி வாழ் தமிழர்கள் சந்திப்பு' நிகழ்ச்சியில் முதல்வர் ஸ்டாலின் கலந்துகொண்டார். இதன்போது அவர் உரையாற்றுகையில்,

"உலக நாடுகளை குறிப்பாக, வளர்ச்சியடைந்த நாடுகளைப் போல, நமது தமிழகமும் வளர வேண்டும். எனவே, உங்கள் தாய் மண்ணுக்கு உங்களால் முடிந்த உதவிகளை செய்யுங்கள். சிறிய வணிகம் செய்தாலும், தமிழகத்திலும் தொடங்க முயற்சி செய்யுங்கள். பெரிய நிறுவனங்களில் வேலை செய்கிறீர்கள் என்றால், தமிழகத்தில் உள்ள வாய்ப்புகள் பற்றி உங்கள் நிறுவனத்தில் எடுத்துச் சொல்லி, தமிழகத்தில் முதலீடு செய்ய ஊக்குவிக்க வேண்டும். இந்த பூமியில் எங்கு சென்றாலும் தமிழர் என்ற அடையாளத்தை விட்டுவிடாதீர்கள். ஆண்டுக்கு ஒருமுறையாவது குழந்தைகளுடன் தமிழகம் வாருங்கள். " என்று குறிப்பிட்டுள்ளார்.

# மோடி – விளாடிமிர் புடின் காரில் முக்கிய ஆலோசனை



சீனாவில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாட்டில், பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து கூட்டறிக்கை வெளியிடப்பட்டது.

மாநாட்டுக்கு பின்னர், ஒன்றாக புறப்பட்டு சென்ற ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினும், பிரதமர் மோடியும் காரிலேயே அமர்ந்து ஒரு மணி நேரம் தீவிர ஆலோசனை நடத்தினர்.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (எஸ்.சி.ஓ) உச்சி மாநாடு சீனாவின் தியான்ஜின் நகரில் நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் 20 இற்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றனர். முதல் நாள் மாநாட்டின்போது சீன



ஜனாதிபதி ஜி ஜின்பிங்கை பிரதமர் மோடி சந்தித்தார்.

இந்நிலையில், மாநாட்டின் ஒரு பகுதியாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை, பிரதமர் மோடி நேற்று சந்தித்தார். பின்னர், அவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

“இந்திய, ரஷ்ய உச்சி மாநாடு வரும் டிசம்பரில் டில்லியில் நடைபெற உள்ளது. இதில் ரஷ்ய ஜனாதிபதி புடின் பங்கேற்க உள்ளார். அவரது வருகையை எதிர்பார்த்து 140 கோடி இந்தியர்களும் ஆவலோடு காத்திருக்கின்றனர். புடினை ஒவ்வொரு முறை சந்திக்கும்போதும் மறக்க முடியாத அனுபவமாக அமைந்து விடுகிறது.

இந்தியா – ரஷ்யா இடையே மிக நெருங்கிய நட்புறவு நீடிக்கிறது. இக்கட்டான காலங்களில்கூட இரு நாடுகளும் தோளோடுதோள் நின்று பயணம் செய்கின்றன. உலக நன்மை, அமைதி, வளத்துக்காக இரு நாடுகளும் இணைந்து செயல்படுகின்றன.

குறிப்பாக உக்ரைன் போர் தொடர்பாக ரஷ்யாவுடன் இந்தியா தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. ரஷ்யாவும், உக்ரைனும் பேச்சுவார்த்தை மூலம் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காண வேண்டும். உக்ரைன் போருக்கு முற்றுப்புள்ளி வைத்து நிரந்தர அமைதி திரும்ப வேண்டும்.

ரஷ்யாவுக்கும் இந்தியாவுக்கும் நெருங்கிய நட்புறவு நீடிக்கிறது. அனைத்து துறைகளிலும் இரு நாடுகளும் இணைந்து செயல்படுகின்றன. குளோபல் சவுத் கூட்டமைப்பின் ஓர் அங்கமாக எஸ்.சி.ஓ. அமைப்பு செயல்படுகிறது.” – என்றனர்.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (எஸ்.சி.ஓ) உச்சி மாநாட்டின் நிறைவாக கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. இதில் காஷ்மீரின் பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. ‘தாக்குதலுக்கு காரணமானவர்கள், ஆதரவு அளித்தவர்கள் நீதியின் முன்பு நிறுத்தப்பட வேண்டும். தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு எஸ்.சி.ஓ. கூட்டமைப்பு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துக் கொள்கிறது’ என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம் எஸ்.சி.ஓ. உறுப்பு நாடுகளின் பாதுகாப்புத் துறை அமைச்சர்கள் மாநாடு சீனாவின் குவிங்டாங் நகரில் நடைபெற்றது. இதில் இந்தியா சார்பில் மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் பங்கேற்றார். அப்போது வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், பஹல்காம் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவிக்க வேண்டும் என்று இந்தியா சார்பில் வலியுறுத்தப்பட்டது. ஆனால் இந்த கோரிக்கையை சீனா ஏற்கவில்லை.

இதனால், கூட்டறிக்கையில் கையெழுத்திட அமைச்சர் ராஜ்நாத் சிங் மறுத்துவிட்டார். ஒருமித்த கருத்து எட்டப்படாததால் கூட்டறிக்கை வெளியிடப்படவில்லை. இந்த சூழலில் சீனாவின் தியான்ஜின் நகரில் நடைபெற்ற உச்சி மாநாட்டில் பஹல்காம் தாக்குதலுக்கு பகிரங்கமாக கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது இந்தியாவுக்கு கிடைத்த வெற்றி என்று அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

எஸ்.சி.ஓ. மாநாடு முடிவடைந்ததும், ஜனாதிபதி புடின் தனது சிறப்பு காரில் ஹோட்டலுக்கு புறப்பட்டார். அப்போது பிரதமர் மோடியையும் அவர் தனது காரில் அழைத்துச் சென்றார். இரு தலைவர்களும் ஹோட்டலுக்கு சென்ற பிறகும் காரில் இருந்து இறங்கவில்லை. சுமார் ஒரு மணி நேரம் ஜனாதிபதி புடினும், பிரதமர் மோடியும் காரிலேயே தீவிர ஆலோசனை நடத்தினர். அமெரிக்க அரசின் வரி விதிப்பு, உக்ரைன் போர் குறித்து அவர்கள் முக்கிய பேச்சுவார்த்தை நடத்தியிருக்கக்கூடும் என்று கூறப்படுகிறது.



# திறந்த வெளியில் இரவை கழித்த கிழக்கு ஆப்கானிஸ்தான் மக்கள்

கிழக்கு ஆப்கானிஸ்தான் பிரதேச மக்கள் நேற்றைய இரவை திறந்த வெளியில் கழித்தனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

800 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தும் ஆயிரக்கணக்கானோர் காயமடையக் காரணமாக இருந்த நில அதிர்வையடுத்து அங்கு மீட்புப்பணிகளும் தொடர்ந்து வருகின்றன.

மலைப்பாங்கான குனார் மாகாணத்திலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

இந்த நில அதிர்வின் போது பல கிராமங்களும் அழிக்கப்பட்டுள்ளமையால், இறப்பு எண்ணிக்கை கணிசமாக அதிகரிக்கக்கூடும் என்று அதிகாரிகள் எச்சரிக்கின்றனர்.

பல நாடுகள் ஏற்கனவே உதவி வழங்குவதாக உறுதியளித்துள்ளன, எனினும் சில கிராமங்களுக்கு உதவிகளுக்கான அணுகல்கள் தடைப்பட்டுள்ளன.

இதன் காரணமாக உள்ளூர் சுகாதார வசதிகளும் முடங்கியுள்ளன.





கனடா முரசு
பக்கங்கள் - 03
செவ்வாய்க்கிழமை 02/09/2025

## அமெரிக்காவில் ட்ரோன் விட்ட கனடியர் நாடு கடத்தப்பட்டார்



C2




# அரசியல் கைதிகள் விடுதலையை வலியுறுத்தி கனடாவில் 'விடுதலை நீர் சேகரிப்பு' நிகழ்ச்சி

கனடா - ஒன்ராறியோ மாகாணத்தின், பிரம்டன் நகரத்தில் அமைந்துள்ள தமிழின அழிப்பு நினைவக வளாகத்தில், கனடிய தமிழர் தேசிய அவை அமைப்பின் ஏற்பாட்டில், விடுதலைப் பெரு விருட்சத்திற்கான 'விடுதலை நீர்' சேகரிப்பு நிகழ்வு உணர்வு பூர்வமாக இடம்பெற்றுள்ளது.

C3

# கனடாவின் முதல் இந்திய வம்சாவளி பொலிஸ்துறைத் தலைவர் பணி ஓய்வு








கனடாவின் முதல் இந்திய வம்சாவளி பொலிஸ் துறை தலைவர், 35 ஆண்டுகள் சேவை செய்தபின், சமீபத்தில் பணி ஓய்வு பெற்றுள்ளார்.

168 ஆண்டுகளில் முதன்முறையாக கனடாவில் பொலிஸ் துறை தலைவராக பணியாற்றிய இந்திய வம்சாவளியினர் என்னும் பெருமைக்குரியவர் டெல் மனக்.

வான்கூவர் மற்றும் விக்டோரியா பொலிஸ் துறைகளில் பணியாற்றியவரான மனக், ஒகஸ்ட் மாதம் 27ஆம் திகதி பணி ஒவு பெற்றுள்ளார்.

இந்தியாவின் பஞ்சாப் மாநில பின்னணி கொண்டவரான மனக், 1990 ஆம் ஆண்டு கனடா பொலிஸ் துறையில் இணைந்தார்.

தனது பணிக்காலத்தில் சவாலான பல விடயங்களை எதிர்கொண்ட நிலையிலும், மக்களுடன் அவர் எவ்வித நல்லுறவை வைத்திருந்தார் என்பதை வெளியாகியுள்ள காணொலிகளில் காணமுடிகிறது.

# அமெரிக்காவில் ட்ரோன் விட்ட கனடியர் நாடு கடத்தப்பட்டார்

அமெரிக்காவில் அனுமதியின்றி ட்ரோன் கமரா பயன்படுத்திய நபர் ஒருவரை அந்நாட்டு அதிகாரிகள் கனடாவிற்கு நாடு கடத்தியுள்ளனர்.

ஒன்டாரியோ மாகாணத்தின் பிராம்ப்டன் நகரைச் சேர்ந்த 40 வயது நபர், அமெரிக்காவில் இராணுவ மற்றும் விண்வெளி தளங்களை ட்ரோன் மூலம் படம் எடுத்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, கனடாவுக்கு நாடுகடத்தப்பட்டார்.

ஸியாவோ குவாங் பான் என்ற நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

2025 ஜனவரி 7 ஆம் திகதி ஃப்ளோரிடா மாநிலத்தின் கேப் கானாவெல்



விண்வளி ஆய்வு மையத்திற்கு அருகில் ட்ரோன் இயக்கியபோது கைது செய்யப்பட்டார்.

நீதிமன்ற ஆவணங்களின்படி, அவர் மூன்று நாள்களில் 1,900 இற்கும் மேற்பட்ட புகைப்படங்கள் மற்றும் காணொலிகள் எடுத்திருந்தார் என தெரியவந்துள்ளது.

மேற்படி நபர் முக்கிய பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் உபகரணங்களை அனுமதியின்றி படம் எடுத்தார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பான், குற்றத்தை ஒப்புக்கொண்டதன் காரணமாக அவருக்கு 75 டொலர் அபராதம் விதிக்கப்பட்டதுடன் அமெரிக்காவிற்கு பயணம் செய்யக் கூடாது என தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நபர் தற்போது கனடாவிற்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

# பெண் ஒருவரின் பொய்முடியில் தீ வைத்த மற்றுமொரு பெண் கைது

கனடாவின் வின்னிபெக்கில் பெண் ஒருவர் அணிந்திருந்த பொய்முடி அல்லது விக்கிற்கு தீ மூட்டிய குற்றச்சாட்டில் மற்றுமொரு பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

40 வயது பெண் ஒருவரே இவ்வாறு முன்பின் அறிமுகமில்லா 50 வயது பெண்ணைத் தாக்கி, அவர் அணிந்திருந்த பொய் முடிக்கு தீ வைத்துள்ளார்.

இந்த சம்பவம் குறித்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

வீதியோரத்தில் நடந்துகொண்டிருந்த 50 வயது பெண்ணை, 40 வயது பெண் ஒருவர் அணுகி வாய்த்தகராற்றில் ஈடுபட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது. இருவருக்கும் முன்பே எந்தத் தொடர்பும் இல்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.





வாக்குவாதம் அதிகரித்த நிலையில், குற்றம் சாட்டப்பட்ட பொய் முடிக்கு தீ வைத்தார். அதிர்ஷ்டவசமாக, பாதிக்கப்பட்ட பெண் உடனடியாக விக்கை அகற்றியதால் எவ்வித காயமும் ஏற்படவில்லை.

ஆனால் குற்றம் சாட்டப்பட்ட பெண் பின்னர் திரும்பி வந்து, அந்தப் பெண்ணை உடல் ரீதியாக தாக்கி சிறிய காயங்களை ஏற்படுத்தியுள்ளார் என பொலிஸார் கூறியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட பெண் உடனே அங்கிருந்து தப்பித்து பொலிஸாரிடம் புகார் செய்தார்.

விரைவில் செயற்பட்ட பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து பெண்ணை கைது செய்தனர். இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# அதிவேகமாக வாகனம் செலுத்திய இளைஞருக்கு அபராதம் விதிப்பு

கனடாவின் மாண்ட்ரியலில் 24 வயதான இளைஞர் ஒருவர் அதிவேகமாக வாகனம் செலுத்தியமைக்காக பெருந்தொகை அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நபருக்கு 2,860 கனடிய டொலர் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

க்யூபெக்மாகாணபொலிஸார்பொருத்தியிருந்த வேகக் கேமராக்களின் மூலம் மேற்படி நபரின் குற்றம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை அதிகாலை 2.45 மணியளவில், 196 கிலோ மீற்றர் வேகத்தில் செலுத்திய வாகனமொன்று எடோராட் மொன்ட்பெடிட் வீதியில் பயணம் செய்துள்ளது.




அங்கு அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச வேகம் வெறும் 70 கிலோ மீற்றர் என்பதால், இது மிகப்பெரிய மீறலாக கருதப்பட்டது.

வாகனத்தை ஓட்டிய இளைஞர் தனது சாரதி உரிமம் வைத்திருக்காததால், அதற்கும் 520 டொலர் அபராதம் விதிக்கப்பட்டது.

இதனால் மொத்த அபராத தொகை 2,860 டொலர்களாக பதிவாகியுள்ளது.

அவரது வாகனம் 30 நாள்களுக்கு பறிமுதல் செய்யப்பட்டதுடன் சாரதி உரிமை 7 நாள்களுக்கு இடைநீக்கம் செய்யப்பட்டது.

வேகக்கட்டுப்பாட்டை மீறுவது விபத்துகள் மற்றும் உயிரிழப்புகளுக்கான முக்கிய காரணிகளில் ஒன்றாகவே உள்ளது என பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த ஆண்டு கோடை விடுமுறையின் போது, கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வீதி விபத்துக்களில் அதிகமான உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.




# அரசியல் கைதிகள் விடுதலையை வலியுறுத்தி கனடாவில் 'விடுதலை நீர் சேகரிப்பு' நிகழ்ச்சி

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் இனத்தினுடைய விடுதலை உட்பட தமிழ் அரசியல் கைதிகளின் விடியலுக்கான குறியீடாக, 'குரலற்றவர்களின் குரல் அமைப்பினால்' முன்னெடுக்கப்பட்டுவரும் விடுதலை நீர் சேகரிப்பு செயற் கருமத்திற்கு வலுச்சேர்க்கும் முகமாக இந்த கவனம்தொடும் நிகழ்வு இடம் பெற்றுள்ளது.

"நிறைகுடம் சாய்த்து நீரதை வார்த்து சிறை வாடும் நம்மவரை உயிர்ப்புடன் மீட்டிட... தரை கிளரும் துளிர்தனை தல விருட்சமாக்கிடுவோம். தூய நீர் வார்த்து, புனிதமரம் வானம்தொட அணிதிரண்டு எழுந்திடுவீர்." என்ற கோஷம் முழங்கிட நிகழ்வு எழுச்சிகோலம் பூண்டுள்ளது.

விடுதலை நீர் வார்ப்பதில், பிரம்டன் நகரபிதா உட்பட அரசியல் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், புலம்பெயர் தமிழ் உறவுகள் எனப் பல தரப்பினரும் ஆர்வத்துடன் பங்கேற்றுள்ளனர்.

மேலும், இனத்தின் பெயரில் வஞ்சிக்கப்பட்டு ஸ்ரீலங்கா சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் எமது உறவுகளின் விடுதலைக்காக தமிழ் மக்களாகிய நாம் மெய்யுணர்வுகொண்டு உழைக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

அந்த வகையில், தாயகத்தில் மட்டுமல்லாது தமிழர்கள் செறிந்து வாழக் கூடிய புலம்பெயர் நாடுகளின் ஒவ்வொரு நகர, மாநகர சபைகளிலும் இதுபோன்ற 'விடுதலை நீர் சேகரிப்பு நிகழ்வை' ஒரு நூதனக் கவனயீர்ப்பு போராட்ட வடிவமாக முன்னெடுக்க வேண்டும் என்று ஏற்பாட்டாளர்களால் வலியுறுத்தப்பட்டுள்ளது.





